வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் செப்டம்பர் மாதம் 27.09.2023-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள் விபரம் :

முன்னிலை : திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி
நகர்மன்ற தலைவர்

பொருள் : 1

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் முதிர் கொசுக்களை கட்டுப்படுத்த Portable Fogging Machine கொண்டு புகை தெளிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது. மேற்படி இயந்திரத்தை எடுத்துக்கொண்டு படிகளில் ஏறி, இறங்குவது சிரமமாக இருப்பதால் Indoor Fogging Machine மூலம் வீடுவீடாக சென்று புகை மருந்து தெளிக்க ஏதுவாகவும், பள்ளி வகுப்பறைகளில் புகை மருந்து தெளிக்க ஏதுவாகவும் 6 எண்ணம் Indoor Fogging Machine கொள்முதல் செய்யவும், இயந்திரம் இயக்க தேவையான Gas Cylender 200 எண்ணம் கொள்முதல் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மழை காலங்களில் கொசு உற்பத்தி அதிகமாக காணப்படும் என்பதால் பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 773 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 2

இந்நகராட்சியில் தயார் செய்யப்படும் இயற்கை உரத்தினை கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு செய்து தமிழ்நாடு வேளாண் துறையில் உரத்தினை விற்பனை செய்வதற்காக உரிமம் பெறவும், உரத்தினை பேக்கிங் செய்ய உரிய உரப்பைகள் 3 அளவுகளில் (5 Kgs, 10Kgs, 25Kgs) அளவுகளில் 3000 Nos தயார் செய்யவும் அதற்கான செலவினத்தொகை ரூ.1.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 774 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 3**

வால்பாறை நகராட்சியில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2023-ம் ஆண்டிற்கான சீருடை, சீருடை தையற் கூலி மற்றும் காலணி போன்றவை அரசு சார்பு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் அல்லது காதி கிராப்ட்ஸ் நிறுவனங்களில் கொள்முதல் செய்து பணியாளர்களுக்கு வழங்க

**ஒரு <u>ஆண் பணியாளருக்கு :</u>**

1. 2 செட் சீருடை (காக்கி) = 6.60 Mts
2. தலைப்பாகை = 2 எண்ணம்
3. காலணி = 1 செட்
4. தையற்கூலி = ரூ.800/- வீதமும்

**ஒரு <u>பெண் பணியாளருக்கு :</u>**

1. சேலை = 2 எண்ணம்
2. ஜாக்கெட் = 2 எண்ணம்
3. காலணி = 1 செட்
4. தையற்கூலி = ரூ. 80/- வீதமும் வழங்க ஏதுவாக

ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 775 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 4**

வால்பாறை நகராட்சி, திடக்கழிவு மேலாண்மை பணிகள், வரிவசூல் அவ்வவ்போதைய அரசு அறிவிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களான TN-41-AZ-1337, TN-41-AZ-1347 மற்றும் TN-41-Q-8638 பணிமனையில் உள்ள 2 வாகனங்கள் சேர்த்து 5 வாகனங்களுக்கு சிறிய கூம்பு குழாய், பவர் ஆம்பிளி பிளேயர், மைக்

அமைத்து விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.94,000/- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 776 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 5**

வால்பாறை நகராட்சிக்கு சொந்தமான TN-41-AH-6458 டம்பர் பிளேசர் வாகனம் 2012-2013-ம் ஆண்டு IUDM திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டது. மேற்படி வாகனம் குப்பைத்தொட்டி இல்லாத நகரமாக மாற்றப்பட்டதால் தொடர்ந்து இரண்டு வருடங்களாக இயக்கப்படாமல் வாகனம் பயனற்ற நிலையில் உள்ளது. தற்போது நகராட்சி பகுதிகளில் சேகாரம் செய்யப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்த நேரடியாக சிமெண்ட் தொழிற்சாலைக்கு (Ariyalur Cement Factory) கொண்டு செல்ல வேண்டி இருப்பதால் அதற்கு வாடகை வாகனம் அமர்த்தினால் ஒரு நடைக்கு ரூ. 14,000 ஆகும் என்பதால் மேற்படி நமது வாகனத்தை பெரிய தொட்டியாக மாற்றி வடிவமைக்கவும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனம் மாற்றத்தை பதிவு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 777 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 6**

வால்பாறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான டெமிபாஸ் 50% ECA, பைரித்திரம் 2% Extrat, BT Powder கையிருப்பு அளவு இல்லாததாலும், டெங்கு காய்ச்சல் பரவி வருவதால் மழைக்காலத்தை கருத்தில் கொண்டு கொசு ஒழிப்புக்கு தேவையான கெமிக்கல் பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி

1. டெமிபாஸ் 50% ECA - 40 Lits
2. பைரித்திரம் 2% Extrat – 200 Lits
3. BT Powder – 100 Kgs

கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சம் பொதுநிதியில் வாங்கிக்கொள்ள மன்ற ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 778 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 7**

வால்பாறை நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டிற்கு தேவையான கிருமி நாசினி பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள், பினாயில் மற்றும் லெமன் கிராஸ் ஆயில் கையிருப்பு அளவு மிக குறைந்த அளவில் உள்ளதால் மழைக்காலத்தை கருத்தில் கொண்டு பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி

1. பிளிச்சிங் பவுடர் - 6 டன்
2. சுண்ணாம்பு தூள் - 12 டன்
3. பினாயில் - 2000 லிட்டர்
4. லெமன் கிராஸ் - 200 லிட்டர்

கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.50 இலட்சம் பொதுநிதியில் வாங்கிக்கொள்ள மன்ற ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 779 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 8**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொதுமக்கள் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு அறிவித்த ஈமச்சடங்கு தொகை ரூ.5000/- வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஈமச்சடங்கு தொகை வழங்க அரசிடமிருந்து மானியம் இந்நகராட்சிக்கு வரப்படாத காரணத்தினால் இதற்கு முன்னர் ஈமச்சடங்கு தொகை வழங்க ஏற்பட்ட செலவினத்தொகை ரூ.50,00,000/- மற்றும் தற்போது ஏற்படும் செலவினத்தையும் நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ளவும், அரசிடமிருந்து வரப்பெறும் மானியத்தொகையை நகராட்சி பொதுநிதியில் சரிகட்டவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 780 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 9**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தனலட்சுமி டிரைவிங் ஸ்கூல், வால்பாறை என்ற நிறுவனத்தின் மூலம் TN-41-AH-6472 வாகனத்திற்கு FC Fees -ரூ.850, Service Charge - ரூ.2,000, G.Tax - ரூ. 550 மற்றும் Stickering and Labour - ரூ. 5100 மொத்தம் பட்டியல் தொகை ரூ.8,500/-யினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 781 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 10**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தனலட்சுமி டிரைவிங் ஸ்கூல், வால்பாறை என்ற நிறுவனத்தின் மூலம் TN-41-AZ-4978 வாகனத்திற்கு காப்பீடு வரி செலுத்தியதற்கு பட்டியல் தொகை ரூ.22,384/-யினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 782 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 11**

இந்நகராட்சியில் 2023-2024-ம் ஆண்டிற்கான சொத்துவரி மற்றும் காலியிட வரியினை வசூல் செய்வதற்கு அஞ்சல் அலுவலகம் மூலம் சொத்தின் உரிமையாளர்களுக்கு கேட்பு அறிவிப்பினை அனுப்பியதற்கு அஞ்சல் அலுவலகத்தில் இருந்து ரூ. 50,490/-க்கு பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை அஞ்சல் அலுவலகத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவிற்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண். 783 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 12

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தனலட்சுமி டிரைவிங் ஸ்கூல், வால்பாறை என்ற நிறுவனத்தின் மூலம் TN-41-AZ-5029 வாகனத்திற்கு காப்பீடு வரி செலுத்தியதற்கு பட்டியல் தொகை ரூ.12,196/-யினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 784 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 13

இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளை SH78 மாநில் நெடுஞ்சாலை (பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் சாலக்குடி) இணைக்கும் இணைப்பு சாலைகளை பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை கருத்தில் கொண்டு வனத்துறை சோதனைச்சாவடிகளில் வழக்கம் போல் 24 மணி நேரமும் செயல்பட நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 785 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 14

இந்நகராட்சி 3-வது வார்டு உறுப்பினர் 3-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள கோரியது கீழ்கண்டவாறு.

1. ஐயர்பாடி முதல் பிரிவில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளி அருகில் மேலுள்ள குடியிருப்பு லைன் ஆல்பர்ட் என்கிற சிவக்குமார் வீட்டின் அருகில் நடைபாதை அமைத்தல்.
2. ஐயர்பாடி முதல் பிரிவில் உள்ள பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல்.

3. ஐயர்பாடி முதல் பிரிவில் உள்ள இளங்கோ லைனுக்கு அருகில் மேல் லைனுக்கு செல்லும் நடைபாதை அமைத்தல்.
4. அப்பர்பாரளை ஐயர்பாடி எஸ்டேட் மருத்துவமனையிலிருந்து அப்பர்பாரளை மேல் பகுதி முதல் முனீஸ்வரன் கோவில் வரை அரசு பேருந்து சென்று வர சாலை அமைத்தல்.
5. அப்பர்பாரளை பள்ளியிலிருந்து 8-ம் நம்பர் பாடிக்கு செல்லும் நடைபாதை அமைத்தல்.
6. அப்பர்பாரளை மெயின் சாலையிலிருந்து கொய்னா பாடிக்கு செல்லும் நடைபாதை அமைத்தல்.
7. அப்பர்பாரளை பேருந்து நிலையத்திற்கு பின்புறம் மெயின் சாலையிலிருந்து விநாயகர் கோவில் வரை நடைபாதை அமைத்தல்.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 786 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 15

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17-ல் முடீஸ் டவுன் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருகோவில் அருகில் தரை தளம் மற்றும் பாதுகாப்புச்சுவர் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருகோவில் அருகில் தரை தளம் மற்றும் பாதுகாப்புச்சுவர் அமைத்தல் | 9.90 |

அலுவலக குறிப்பு

**1.மன்றம் ஏற்கலாம்**

**2.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண். 787 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 3-வது பகுதியில் உள்ள ரொட்டிக்கடை பாரளை பாறைமேடு பகுதியில் கோவிலுக்கு அருகில் படிக்கட்டு மற்றும் நடைபாதை கனமழையின் காரணமாக மிகவும் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை சீரமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இதனை சீரமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 7.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ரொட்டிக்கடை பாரளை பாறைமேடு பகுதியில் கோவிலுக்கு அருகில் படிக்கட்டு மற்றும் நடைபாதை அமைத்தல் | 7.00 |

**அலுவலக குறிப்பு**

**1.மன்றம் ஏற்கலாம்**

**2.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**

**நகர்மன்ற தீர்மான எண். 788 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 17

இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கு பகுதியில் SBM 2.0 FSTP அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் அதன் பயன்பாட்டிற்காக SBM 2.0 திட்டத்தின் கீழ் Cesspool Tanker ஒன்று ரூ. 43.25 இலட்சம் (நகராட்சி பங்குத்தொகை 7.35 இலட்சம் பொதுநிதி) மதிப்பீட்டில் வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 9192/2022/SBM-1 நாள் 21.08.2023 ன் படி வாங்க அனுமதி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Purchase of Cesspool tanker 6000 litre capacity at Valparai municipality | 43.25 |

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் ஏற்கலாம்.

2.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 789 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 18

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் - 12-வது பகுதியில் உள்ள கருமலை பகுதியில் படிக்கட்டு மற்றும் நடைபாதை கனமழையின் காரணமாக மிகவும் சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை சீரமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. இதனை சீரமைக்க தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ. 9.00 இலட்சத்திற்கு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கருமலை பகுதியில் படிக்கட்டு மற்றும் நடைபாதை சீரமைத்தல் | 9.00 |

அலுவலக குறிப்பு

1.மன்றம் ஏற்கலாம்

2.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 790 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 19**

இந்நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்கள் ஏல அறிவிப்பு வெளியிடப்படுகிறது. ஏலம் நாள்.17.10.2023, ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்படும் கடைசி நாள்.16.10.2023, நேரம் மாலை 5.00 மணி ஏலத்தில் கலந்து கொள்ள வைப்புத் தொகை வங்கி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டிய கடைசி நாள். 16.10.2023 நேரம் மாலை 5.00 மணி

| வ. எண் | ஏல இனங்கள் | ஏல வைப்புத் தொகை (வங்கி வரைவோலையாக) ரூ. | கூடுதல் வைப்புத் தொகை (வங்கி வரைவோலையாக) ரூ. | மின் கட்டணத்திற்கான வைப்புத் தொகை ரூ. | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சமூதாய கூடம். | 5,00,000/- | 5,00,000/- | 5,000/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான படகு இல்லம். | 25,00,000/- | 25,00,000/- | 10,000/- | ஒப்படைக் கும் நாள் முதல் ஓராண்டு மேலும் இரண்டா ண்டுகள் தன்னியல் பாக புதுப்பிக்கப் படும் |
| 3 | துளசிங்க நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான தாவரவியல் பூங்கா. | 10,00,000/- | 10,00,000/- | 10,000/- | |
| 4 | நகராட்சிக்கு சொந்தமான ஆடு வதை கூடம். | 50,000/- | 50,000/- | 5,000/- | |
| 5 | காந்திசிலை பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நவீன கட்டண கழிப்பிடம். | 1,00,000/- | 1,00,000/- | 5,000/- | |
| 6 | புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நவீன கட்டண கழிப்பிடம். | 50,000/- | 50,000/- | 5,000/- | |
| 7 | புதுமார்க்கெட்டில் உள்ள நாட்டுமருந்து கடை அருகில் நகராட்சிக்கு சொந்தமான நவீன கட்டண கழிப்பிடம். | 1,00,000/- | 1,00,000/- | 5,000/- | |
| 8 | புதுமார்க்கெட்டில் உள்ள துப்புரவு வருகை பதிவு அலுவலகம் அருகில் நகராட்சிக்கு சொந்தமான நவீன கட்டண கழிப்பிடம். | 1,00,000/- | 1,00,000/- | 5,000/- | |
| 9 | தினசரி பல்பொருள் சுங்கம் வசூலிக்கும் உரிமம். | 2,00,000/- | 2,00,000/- | ---- | |
| **கடைகள் மற்றும் கேண்டீன்(மூன்றாண்டு தொகுப்பு)** | | | | | |
| 10 | வால்பாறை நகராட்சிக்குட்பட்ட புதுமார்கெட் பகுதிகளில் உள்ள கடைகள்<br><br>A1/17 ,A1/18,<br>2/10, 2/12, 2/13, 2/14,<br>3/4, 3/5, 3/6, 3/7,<br>5/8, 5/9, 5/10,<br>50, 57, 64, 71, 100, 101, 102, 104, 106, 107, 109,<br>B32 | 50,000/- (கடை ஒன்றுக்கு) | 50,000/- (கடை ஒன்றுக்கு) | 5,000/- (கடை ஒன்றுக்கு) | ஒப்படைக் கும் நாள் முதல் மூன்றாண் டு மேலும் இரண்டு மூன்றாண் டு தொகுப்புக ளுக்கு தன்னியல் பாக புதுப்பிக்கப் படும்) |
| 11 | துளசிங்க நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான தாவரவியல் பூங்காவில் உள்ள கேண்டீன். | 1,00,000/- | 1,00,000/- | 5,000/- | |

மேற்படி வரியில்லா இனங்கள் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் .

**அலுவலக குறிப்பு** :

மன்றம் பதிவு செய்யலாம்.

**கோப்பு எண்.490/2022/அ1**
**நகர்மன்ற தீர்மான எண். 791 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 20

இந்நகராட்சி நகர்மன்ற 12-வது வார்டு உறுப்பினர் தனது வார்டு பகுதியில் கீழ்கண்ட இடங்களில் மோரி அமைத்து தரக்கோரியது.

1. கருமலை மருத்துவமனை வளைவில்
2. அக்காமலை ரு பெண்டு வளைவில்
3. அக்காமலை தபால் நிலையம் அருகில்
4. ஊசிமலை கைகாட்டியிலிருந்து அக்காமலை செல்லும் வளைவு வரை

5. அக்காமலை விநாயகர் கோவில் அருகில்

**நகர்மன்ற தீர்மான எண். 792 அனுமதிக்கப்படுகிறது.**

## கூடுதல் மன்றப்பொருள்

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1622/2022/பி1 நாள் 12.09.2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY NULM) 2022-2023 திட்டத்தின்கீழ் வால்பாறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் தகுதியுள்ள சாலையோர வியாபாரிகளுக்கு கீழ்கண்ட விவரப்படி விற்பனை வண்டிகள் (Vending Carts) விநியோகம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வண்டிகள் வழங்க வேண்டிய தொழில் விவரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | Fruits & Vending Carts | 8 |
| 2. | Food Items Carts | 12 |
| 3. | Flowers Carts | 2 |
| **Total Vending Carts** | | **22** |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட விவரத்திற்கு நகராட்சி பகுதிகளில் தகுதியான சாலையோர வியாபாரிகளுக்கு வண்டிகள் (Vending Carts) விநியோகம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 793 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் திருவள்ளுவர் நகர் பகுதியில் அமைந்துள்ள நாகாத்தம்மன் கோவில் முதல் வழக்கறிஞர் விஸ்வநாதன் வீடு வரை நடைபாதை மற்றும் வடிகால் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருவள்ளுவர் நகர் பகுதியில் அமைந்துள்ள நாகாத்தம்மன் கோவில் முதல் வழக்கறிஞர் விஸ்வநாதன் வீடு வரை நடைபாதை மற்றும் வடிகால் அமைத்தல் | 9.90 |

அலுவலக குறிப்பு

1.மன்றம் ஏற்கலாம்

2.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 794 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 3

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் MGR நகர் பகுதியில் அர்சுனன் வீடு முதல் செல்லையா கோமுட்டி ராஜா வீடு வரை நடைபாதை, வடிகால் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | MGR நகர் பகுதியில் அர்சுனன் வீடு முதல் செல்லையா கோமுட்டி ராஜா வீடு வரை நடைபாதை, வடிகால் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் | 9.90 |

அலுவலக குறிப்பு

1.மன்றம் ஏற்கலாம்

2.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 795 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் : 4

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் கலைஞர்நகர் பகுதியில் பிலீப் வீடு முதல் சமூசா பாய் வீடு வரை நடைபாதை, வடிகால் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கலைஞர்நகர் பகுதியில் பிலீப் வீடு முதல் சமூசா பாய் வீடு வரை நடைபாதை, வடிகால் மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் | 9.90 |

அலுவலக குறிப்பு

1.மன்றம் ஏற்கலாம்

2.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

நகர்மன்ற தீர்மான எண். 796 அனுமதிக்கப்படுகிறது.

பொருள் : 5

இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம், அம்மா உணவகம், சமுதாய நலக்கூடம், ஆய்வு மாளிகை, யாத்திரி நிவாஸ் மற்றும் தமிழக முதல்வரின் காலை சிற்றுண்டி மைய சமையற்கூட கட்டிடங்கள் ஆகிய இடங்களில் உள்ள 25 எண்ணிக்கைகள் தீயணைப்பு கருவிகள் பழுது பார்த்தல் மற்றும் மறு நிரப்புதல் (Re-filling Gas) பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு செலவீனம் மேற்கொள்ளவும் ஏற்படும் செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண். 797 அனுமதிக்கப்படுகிறது.

பொருள் : 6

வால்பாறை நகராட்சியில் பல்வேறு பகுதிகளில் பணிகள் மேற்கொள்ள பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவரின் கோரிக்கையினை ஏற்று பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் முன்அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கு.

| பொருள் | | |
|---|---|---|
| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு |
| 1 | வாட்டாபால்ஸ் பழைய காடு பகுதியில் புதுக்கழிப்பிடம் கட்டுதல் | 17.00 |
| 2 | வாட்டாபால்ஸ் நகராட்சி துவக்கப்பள்ளியில் சத்துணவு மையம் கட்டுதல்(077/Noon meal/0000178) | 9.00 |
| 3 | ரொட்டிக்கடை பகுதியில் நடைபாதை அருகில் தடுப்புச்சுவர் அமைத்தல் (Unicode 077003L03) | 8.00 |
| 4 | ரொட்டிக்கடை பகுதியில் சமுதாயக்கூடம் கட்டுதல்(077/Community hall/0000097) | 35.00 |
| 5 | ரொட்டிக்கடை பகுதியில் நடைபாதை அருகில் தடுப்புச்சுவர் அமைத்தல் (Unicode 077003L07) | 9.00 |
| 6 | ஸ்டேன்மோர் ஆத்துமட்டம் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் காரிய மண்டபம் அமைத்தல் | 7.00 |
| 7 | வில்லோனி சாலை ஓரம் 0/0 முதல் 3/200 வரை தரைதளம் அமைத்தல் (Unicode 077005R04) | 18.00 |
| 8 | முருகாளி சாலை ஓரம் கி.மீ 2/0 முதல் 3/900 வரை தரைதளம் அமைத்தல் (Unicode 077007R05) | 18.50 |
| 9 | அண்ணாநகர் பகுதியில் ராமர் கோவில் செல்லும் வழியில் தடுப்புச்சுவர், படிக்கட்டு மற்றும் வடிகால் அமைத்தல் (Unicode 077010L75) | 8.00 |
| 10 | அண்ணாநகர் பகுதியில் நடைபாதை அருகில் தடுப்புச்சுவர் மற்றும் படிக்கட்டு அமைத்தல் (Unicode 077011L29) | 7.60 |
| 11 | அண்ணாநகர் செல்லும் நடைபாதை அருகில் தடுப்புச்சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் (Unicode 077011L77) | 9.80 |
| 12 | கக்கன் காலனி செல்லும் நடைபாதை அருகில் கழிவு நீர் கால்வாய் மற்றும் நடைபாதை அமைத்தல் (Unicode 077011L49) | 9.95 |
| 13 | காமராஜ் நகர் செல்லும் நடைபாதை அருகில் தடுப்புச்சுவர் அமைத்தல்(Unicode 077011L62) | 9.70 |
| 14 | காமராஜ் நகர் செல்லும் படிக்கட்டு அருகில் தடுப்புச்சுவர் அமைத்தல் (Unicode 077011L60) | 15.00 |
| 15 | நல்லகாத்து சாலை ஓரம் கி.மீ 1/0 கல்வெட்டு அருகில் தடுப்புச்சுவர் கட்டுதல் | 15.70 |
| 16 | பன்னிமேடு பெரிய மாரியம்மன் கோவில் அருகில் பயணிகள் நிழற்குடை கட்டுதல் (077/Bus Shelter/0000027) | 9.00 |
| 17 | பெரியகல்லார் பகுதியில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் (077/Bus Shelter/0000065) | 9.00 |

அலுவலக குறிப்பு

1.மேற்பணிகளுக்கு 25.08.2023 அன்று நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 798 அனுமதிக்கப்படுகிறது.**